மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்)
அவர்களின் செயல்முறை ஆணைகள்
முன்னிலை : திரு.ச.நடராஜன், AMIE., MBA.,

ந.க.எண். 021360/அ1/2/2014-1 நாள்: 29.04.2015

பொருள் : அலுவலக நடைமுறை - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் - தொகுதி-IV- 2007-2008 முதல் 2012-2013 ம் ஆண்டு தேர்வு -மருத்துவத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, இவ்வியக்ககத்தில் பணியில் இணைந்த தட்டச்சர்களின் பணிவரன்முறை செய்தல் - ஆணை வழங்கல் - குறித்து.

பார்வை : 1. இவ்வியக்கக நி-2ன் கடிதம் ந.க.எண். 74776/நி2/2/2012-3 நாள். 07.04.2014 மற்றும் தமிழ்நாடு அரசு பணி தேர்வாணைய செயலரின் கடித எண். 787/PSD-F/2013, நாள். 19.03.2014

2. இவ்வியக்கக பணி நியமன ஆணை எண்.021360, 021362/ அ1/2/2014 நாள்:09.04.2014

*****

**ஆணை:**

பார்வை 1ல் காணும் கடிதம் வழி இவ்வியக்ககத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திருஆர்.ராம்பிரசாத் மற்றும் திருமதி.ஆர். புவனேஸ்வரி ஆகிய தட்டச்சர்களுக்கு பார்வை 2ல் காணும் இவ்வியக்கக ஆணைகளின்படி பணி நியமனம் மற்றும் பணியிட அமர்வு ஆணை வழங்கப்பட்டது. அதன்படி கீழ்காணும் தட்டச்சர்கள் அவர்கள் தங்கள் பெயருக்கு எதிரே குறிப்பிட்ட தேதியில் பணியில் இணைந்துள்ளனர். மேற்குறிப்பிட்டுள்ள தட்டச்சர்கள் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகள் பொது விதி 10(a)(i)ன் படி பணிநியமனம் பெற்று முறையே15.04.2014 முற்பகல் மற்றும் 17.04.2014 முற்பகல் இவ்வலுவலகப் பணியில் தட்டச்சர்களாக பணியில் இணைந்துள்ளனர்.

எனவே கீழ்காணும் பட்டியலில் கலம் 4ல் குறித்துள்ள நாள் முதல் அவர்களின் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது. அவர்களின் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ச்சியாக மூன்று ஆண்டு பணிக் காலத்திற்குள் இரண்டு ஆண்டு பணிக்காலம் முடிக்கும் வகையில் அவர்கள் தகுதி காண் பருவ காலத்தில் வைக்கப்படுகிறார்கள்.

கீழ்காணும் தட்டச்சர்கள் தகுதி காண் பருவ காலத்தில் கணிணியில் அலுவலக இயக்கு முறை (Computer on Office Automation) மற்றும் மருத்துவ விதி தொகுப்பு (Medical Code) தேர்வில் தேர்ச்சி பெற்றால் தான் தகுதி காண் பருவம் பூர்த்தி செய்த ஆணை வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் | அரசுப்பணியில் இணைந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | திருமதி. ஆர். புவனேஸ்வரி | 17.04.2014 மு.ப | 17.04.2014 மு.ப |
| 2 | திரு.ஆர்.ராம்பிரசாத் | 15.04.2014 மு.ப | 15.04.2014 மு.ப |

மேற்படி குறிப்பிட்டுள்ள தட்டச்சர்களின் தற்காலிகப் பணி அவர்கள் தட்டச்சர்களாக அரசுப்பணியில் இணைந்துள்ள நாள் முதல் ( மேலே அவர்கள் பெயருக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தேதி முதல்) 2007-2008 முதல் 2012-2013 வரையிலான காலத்திற்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தினால் நடத்தப்பட்ட தொகுதி - 4 தேர்வு நியமனத்திற்கு எதிராக தொடுக்கப்பட்ட சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரைக் கிளையில் நிலுவையில் உள்ள நீதி பேராணையின் மீது நீதிமன்றத்தின் இறுதி தீர்ப்பின் முடிவிற்கு உட்பட்டு, பணிவரன்முறை செய்யப்படுகிறது.

ச. நடராஜன்
கூடுதல் இயக்குநர் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் (நிர்வாகம்)

பெறுநர்
1. திருமதி. ஆர். புவனேஸ்வரி, தட்டச்சர்,
2. திரு.ஆர்.ராம்பிரசாத், தட்டச்சர்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்,
சென்னை-6.

நகல்
நிர்வாகப் பிரிவு 2 / பணப்பிரிவு (2 நகல்கள்)/ பணிப்பதிவேடு
இருப்புக்கோப்பு / உதிரி

//உண்மை நகல்// அனுப்பப்படுகிறது//

29/4/15
இளநிலை நிர்வாக அலுவலர்
29/4/15. 29/4/15